செ.வெ.எண். 263/செமதொஅ/ 2009 நாள்: 24.08.2009.

**<u>பேரறிஞர் அண்ணாவின் பெயரில் புதிய இணைய தளம் தொடங்கப்பட உள்ளது என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தெரிவித்தார்.</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், சின்ன காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லமானது தமிழக அரசினால் நினைவு இல்லமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இல்லத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்று புகைப்படங்கள், அவர் படித்த புத்தகங்கள், வரைந்த ஓவியங்கள், பயன்படுத்திய உடைகள், மூக்கு கண்ணாடி, பேனா, தட்டு போன்ற பொருட்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி நினைவு இல்லம் வண்ணம் பூசப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளை இன்று(24.08.2009) மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப. ஆகியோர் ஆய்வு செய்தனர்.

ஆய்விற்கு பின் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில், “வருகின்ற செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவு விழா தமிழக அரசால் மிக கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சென்னை பல்கலைகழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறும் விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவம் பொறித்த புதிய ஐந்து ரூபாய் நாணயத்தினை மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் வெளியிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெற்றுக் கொள்கிறார். பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா மலரை மாண்புமிகு ஆந்திர பிரதேச முதலமைச்சர் திரு. ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி அவர்கள் வெளியிட, அதனையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெற்றுக் கொள்கிறார். பேரறிஞர் அண்ணா பெயரில் இணையதளம் ஒன்று தொடங்கப்பட உள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளை தொகுத்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் “தமிழரசு இதழ்” மூலம் தயாரிக்கப்பட்ட கையேடு ஒன்றினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வெளியிட உள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் உரைகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதாஞ்சலி அடங்கிய குறுந்தகடு ஒன்றும் வெளியிடப்பட உள்ளது. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தினை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அரசு அலுவலர்களுடன் கலந்து பேசி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்." என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப., உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.